பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

08 04 2025 7 15 செவ்வாய்க்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. ஜெய்சங்கர், அமெரிக்க அமைச்சர் திரு. **Marco Rubio** உடன் மேற்காசிய நிலவரம் உள்ளிட்ட பல்வேறு விஷயங்கள் குறித்து கலந்துரையாடினார்.

2. சர்வதேச வர்த்தகத்தில் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்த பொருளாதார சீர்திருத்தங்கள் அவசியம் என்று மத்திய அமைச்சர் திரு. பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

3. மின்சார வாகனங்களுக்கு தேவைப்படும் சார்ஜர்கள் உள்நாட்டு தொழில்நுட்பத்திலேயே விரைவில் தயாரிக்கப்படும் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

4. துபாய் பட்டத்து இளவரசரும், ஐக்கிய அரபு எமிரேட்ஸ் துணைப் பிரதமருமான திரு. **Sheikh Hamdan Bin Muhammed Al-Maktoum** இரண்டு நாள் பயணமாக இன்று புதுதில்லி வருகிறார்.

5. ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் பெங்களூரு அணி 12 ரன் வித்தியாசத்தில் மும்பை அணியை வென்றது.

*<u>--- இனி விரிவான செய்திகள் ---</u>*

<<<<>>>>

வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. ஜெய்சங்கர் அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. **Marco Rubio** உடன் தொலைபேசியில் தொடர்புகொண்டு பேசினார்.

அப்போது இந்திய – பசிபிக், இந்திய துணைக் கண்டம், மேற்காசியா மற்றும் கரீபியன் நாடுகளில் நிலவும் சூழல்கள் குறித்து பல்வேறு கருத்துகளை இருவரும் பரிமாறிக் கொண்டனர்.

இதுகுறித்து சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள திரு. ஜெய்சங்கர், இந்தியா – அமெரிக்கா இடையே வர்த்தக ஒப்பந்தத்தை விரைந்து இறுதி செய்ய வேண்டியதன் முக்கியத்துவத்தை அந்நாட்டு அமைச்சர் ஒப்புக்கொண்டதாக குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>

சர்வதேச வர்த்தகத்தில் ஸ்திரத்தன்மை மற்றும் நியாயமான சூழலை மீட்டெடுக்க பொருளாதார சீர்திருத்தங்கள் அவசியம் என்று மத்திய அமைச்சர் திரு. பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நேற்று நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், சீனா தனது பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிப்பதற்கு நியாயமற்ற வர்த்தக நடைமுறைகளை பின்பற்றுவதாக குறை கூறினார்.

உலகளாவிய வர்த்தக விதிமுறைகளை மீறும் வகையிலான சீனாவின் தொழிலாளர் நடைமுறைகளை அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

தற்போது உலக அளவில் ஏற்பட்டுள்ள பங்குச்சந்தை மாற்றங்களுக்கு இடையே சீனாவின் ஆதிக்கம் அதிகரித்து வருவது கவலையளிப்பதாக அமைச்சர் கூறினார்.

இத்தகைய நடவடிக்கையால் இந்தியா போன்ற நாடுகளின் பொருளாதாரம் பாதிப்படைவதாக கூறிய திரு. பியூஷ் கோயல், இந்த ஏற்றத்தாழ்வுகளை சரிசெய்ய நடவடிக்கை எடுக்காவிட்டால் மிகப்பெரிய பொருளாதார நெருக்கடியை உலக நாடுகள் எதிர்கொள்ள வேண்டி வரும் என்றார்.

<<<<>>>>

நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தமது 6 நாள் ஐரோப்பிய பயணத்தின் முதல்கட்டமாக நேற்று லண்டன் சென்றடைந்தார்.

பிரிட்டனுக்கான இந்திய தூதர் திரு. விக்ரம் துரைசாமி, நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமனை **Heathrow** விமான நிலையத்தில் வரவேற்றதாக நிதியமைச்சகத்தின் சமூக வலைதளப் பதிவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

லண்டனில் உள்ள இந்திய தூதரகத்தில் இன்று நடைபெறும் நிகழ்ச்சியில் பங்கேற்கும் நிதியமைச்சர் தொடர்ந்து இந்தியா – பிரிட்டன் அமைச்சர்கள் நிலையிலான பொருளாதாரம் தொடர்பான 13வது சுற்றுப் பேச்சுவார்த்தையிலும் பங்கேற்கிறார்.

<<<<>>>>

நாட்டில் சிறு குறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு வழங்கப்படும் முத்ரா கடனுதவி திட்டத்தின் மூலம் 6 கோடியே 60 லட்சம் மகளிர் பயன் பெற்றிருப்பதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

பிரதமரின் முத்ரா கடன் வழங்கும் திட்டம் தொடங்கப்பட்டு 10 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளது.

கடந்த 2015ஆம் ஆண்டு ஏப்ரல் 8ஆம் தேதி பிரதமர் திரு. நரேந்திர மோடி இத்திட்டத்தை தொடங்கி வைத்தார்.

சிறு குறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு கடன் வழங்கி தொழில்முனைவோரை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் இத்திட்டம் தொடங்கப்பட்டது.

அதிபட்சம் 10 லட்சம் ரூபாய் வரை பெரு நிறுவனங்கள் அல்லாத நிறுவனங்களுக்கு இத்திட்டத்தின் கீழ் கடன் வழங்கப்பட்டு வருகிறது.

மகளிரை தொழில்முனைவோராக ஊக்குவிக்கும் வகையிலும் முத்ரா கடன்கள் வழங்கப்படுகின்றன.

கடனை திருப்பிச் செலுத்துவதற்கான கால அவகாசம் ஒரு ஆண்டு முதல் 7 ஆண்டுகள் வரை நிர்ணயிக்கப்படுகிறது.

10 ஆண்டுகளை நிறைவு செய்துள்ள இத்திட்டத்தின்கீழ் நாடு முழுவதும் 6 கோடியே 60 லட்சத்திற்கும் மேற்பட்ட பயனாளிகளுக்கு 532 கோடி ரூபாய் கடன் வழங்கப்பட்டு மகளிர் பயனடைந்திருப்பதாக மத்திய அரசின் அறிக்கை தெரிவிக்கிறது.

<<<<>>>>

துபாய் பட்டத்து இளவரசரும், ஐக்கிய அரபு எமிரேட்ஸ் துணைப் பிரதமருமான திரு. **Sheikh Hamdan Bin Muhammed Al-Maktoum** இரண்டு நாள் பயணமாக இன்று புதுதில்லி வருகிறார்.

பட்டத்து இளவரசராக பொறுப்பேற்ற பின்னர் அவர் முதல் முறையாக இந்தியா வருகிறார்.

அவருடன் அமைச்சர்கள் மற்றும் உயர் அதிகாரிகள் அடங்கிய குழுவும் இந்தியா வருகிறது.

துபாய் இளவரசருக்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று மதிய உணவு விருந்து அளிக்க இருப்பதாகவும், வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. ஜெய்சங்கர், பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத்

சிங் ஆகியோருடன் துபாய் இளவரசர் பேச்சுகள் நடத்த இருப்பதாகவும் வெளியுறவுத்துறை அறிக்கை தெரிவிக்கிறது.

<<<<>>>>

ஐரோப்பிய யூனியன் மற்றும் லூசோபோன் நாடுகளுடன் இந்தியாவின் நல்லுறவுகளை மேம்படுத்துவதில் போர்ச்சுகல் முக்கிய பங்கு வகிப்பதாக குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு கூறியுள்ளார்.

போர்ச்சுகள் சென்றுள்ள குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்முவுக்கு, லிஸ்பனில் நடைபெற்ற நிகழ்ச்சியில் அந்நாட்டின் உயரிய விருதான **City Key of Honour** என்ற விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் பேசிய குடியரசுத்தலைவர், வரும் 2047ஆம் ஆண்டிற்குள் இந்தியாவை வளர்ந்த நாடாக மாற்றுவதற்கு மத்திய அரசு தீவிரமாக பாடுபட்டு வருகிறது என்று கூறினார்.

அதை நோக்கிய பல்வேறு நடவடிக்கைகளை மத்திய அரசு எடுத்து வருவதாகவும், ஐரோப்பிய நாடுகளுடனான நல்லுறவுகள் தொடர்ந்து மேம்பட்டு வருவதாகவும் குடியரசுத்தலைவர் தெரிவித்தார்.

<<<<>>>>

ஜம்மு-கஷ்மீரின் ஸ்ரீநகர் சென்றுள்ள உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா, இன்று வளர்ச்சித் திட்டங்கள் குறித்து உயர்நிலைக் குழுக் கூட்டத்தில் ஆலோசனை நடத்த உள்ளார்.

ஜம்மு-கஷ்மீரின் ஒட்டுமொத்த பாதுகாப்பு நிலைமை வரும் ஜூலை மாதம் 3ஆம் தேதி தொடங்கவுள்ள அமர்நாத் யாத்திரைக்கான முன்னேற்பாடுகள் உள்ளிட்டவை குறித்தும் அவர் விரிவாக ஆய்வு செய்ய உள்ளார்.

முன்னதாக நேற்று தீவிரவாதிகளால் கொல்லப்பட்ட காவல்துறையினர் உள்ளிட்ட பாதுகாப்புப் படையினரின் குடும்பத்தினரை திரு. அமித் ஷா சந்தித்து ஆறுதல் கூறினார்.

<<<<>>>>

மின்சார வாகனங்களுக்கு தேவைப்படும் சார்ஜர்கள் உள்நாட்டு தொழில்நுட்பத்திலேயே விரைவில் தயாரிக்கப்படும் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

மூன்று மணி நேரத்தில் 90 சதவீத அளவிற்கு மின்னூட்டம் அடையும் வகையிலான சார்ஜர்கள் விரைவில் வர்த்தகப் பயன்பாட்டிற்கு வரும் என்று மத்திய மின்னணுவியல் மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சகத்தின் அறிக்கை தெரிவிக்கிறது.

மின்சார மின்னணுவியல் தொழில்நுட்ப தேசிய திட்டத்தின்கீழ் இந்த வகை சார்ஜர்கள் தயாரிக்கப்படும் என்று அந்த அறிக்கை மேலும் தெரிவிக்கிறது.

வழக்கமான 230 வோல்ட் திறன் கொண்ட வாகனங்களை இயக்குவதற்கும், 50 ஹெர்ட்ஸ் திறன் கொண்ட மின் சக்தியை வழங்குவதற்கும் இந்த வகை சார்ஜர்கள் பயனுள்ளதாக அமையும் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

அணுசக்தி திட்டம் தொடர்பாக ஈரானுடன் நேரடிப் பேச்சுவார்த்தையில் அமெரிக்கா ஈடுபடும் என்று அந்நாட்டு அதிபர் திரு. டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

இஸ்ரேல் பிரதமர் திரு. பெஞ்சமின் நெதன்யாகுவுடன் வாஷிங்டனில் நேற்று கூட்டாக செய்தியாளர்களிடம் பேசிய திரு. ட்ரம்ப், ஈரானுடனான பேச்சுவார்த்தை தோல்வியடைந்தால் மிகப்பெரிய விளைவுகளை சந்திக்க நேரிடும் என்று எச்சரிக்கை விடுத்தார்.

அணு ஆயுதங்களைத் தயாரிப்பதற்கு ஈரானுக்கு அனுமதி அளிக்க முடியாது என்றும் அவர் உறுதிபடக் கூறினார்.

ஈரானுடனான அணுசக்தி ஒப்பந்தத்தில் இருந்து திரு. ட்ரம்ப், தமது முந்தைய ஆட்சியின்போது விலகியது குறிப்பிடத்தக்கது.

<<<<>>>>

அமெரிக்கா விதித்துள்ள வரி உயர்வால் பல்வேறு நாடுகளின் பொருளாதாரத்தில் பாதிப்பு ஏற்பட்டிருப்பதாக ரஷ்ய அரசின் செய்தித்தொடர்பாள திரு. **Demitry Peskov** குறை கூறியுள்ளார்.

மாஸ்கோவில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், உலகளாவிய பொருளாதார ஸ்திரத்தன்மையை ரஷ்யா உன்னிப்பாக கண்காணித்து வருவதாக கூறினார்.

உலக பொருளாதார சூழலுக்கு ஏற்ப ரஷ்யாவின் பொருளாதாரத்தில் ஏற்படும் விளைவுகளை தவிர்க்க தேவையான நடவடிக்கைகளை ரஷ்ய அரசு மேற்கொள்ளும் என்றும் திரு. **Demitry Peskov** குறை கூறினார்.

<<<<>>>>

தமிழகத்தில் நாமக்கல் மாவட்டம் வளையப்பட்டி அருகே நிலத்திற்கு தண்ணீர் பாய்ச்சும்போது மின்சாரம் தாக்கி 2 குழந்தைகள் உட்பட 3 பேர் உயிரிழந்தனர்.

ஆண்டாபுரம் கிராமத்தில் மின்சாரம் பாய்ந்த கம்பியை அப்பகுதியில் விளையாடிக் கொண்டிருந்த 2 சிறுமிகள் தொட்டதில் அவர்கள் உயிரிழந்ததாகவும், அவர்களைக் காப்பாற்றச் சென்ற குழந்தைகளின் பாட்டியும் மின்சாரம் தாக்கியதில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்ததாகவும் காவல்துறையினர் தெரிவித்தனர்.

<<<<>>>>

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் பெங்களூரு அணி 12 ரன் வித்தியாசத்தில் மும்பை அணியை வென்றது.

நேற்றிரவு மும்பையில் நடைபெற்ற இப்போட்டியில் டாஸ் வென்ற மும்பை அணி பந்துவீச தீர்மானித்தது.

முதலில் களமிறங்கிய பெங்களூரு அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 5 விக்கெட் இழப்புக்கு 221 ரன் எடுத்தது.

222 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்கோடு பின்னர் களமிறங்கிய மும்பை அணி 9 விக்கெட் இழப்புக்கு 209 ரன் மட்டுமே எடுத்தது.

இன்று நடைபெறும் முதல் போட்டியில் கொல்கத்தா - லக்னோ அணியை எதிர்கொள்கிறது.

கொல்கத்தாவில் நடைபெறும் இப்போட்டி பிற்பகல் மணி 3.30க்கு தொடங்குகிறது.

இரவு மணி 7.30க்கு முல்லன்புரில் நடைபெறும் மற்றொரு ஆட்டத்தில்

பஞ்சாப் அணி - சென்னை அணியுடன் மோதுகிறது.

உலகக் கோப்பை துப்பாக்கிச் சுடும் போட்டியில் இந்தியா 2 தங்கம், ஒரு வெள்ளி, ஒரு வெண்கலம் என 4 பதக்கங்களுடன் பட்டியலில் இரண்டாவது இடத்தில் உள்ளது.

**<<<<The End>>>>**